RESOURCES FOR MTLs

# கலந்துரையாடல்வழிக் கருப்பொருள் அறிமுகம்
# பாலர் பள்ளி முதலாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 3
# ‘நல்ல பழக்கம்’

**கண்ணோட்டம்:**

பிள்ளைகள் தங்களுக்குப் பிடித்த விளையாட்டுப் பொருள்களைப்பற்றி ஆசிரியருடன் கலந்துரையாடுவார்கள். பின்னர், பாடத்தின் கருப்பொருளுக்குப் பொருத்தமான ‘ஓடி விளையாடு பாப்பா’ என்ற பாடலை ஆசிரியருடன் பாடி மகிழ்வார்கள். இந்த நடவடிக்கையின்வழி பாடத்தின் கருப்பொருளை அறிந்து கொள்வார்கள்.

**கற்றல் குறிக்கோள் 1: தாய்மொழி கற்றலில் ஆர்வங்கொள்ளுதல்**

1. **தாய்மொழி நடவடிக்கைகளில் ஈடுபாட்டுடன் பங்கேற்றல்**

- ✓ தாய்மொழி நடவடிக்கைகளின்போது கேள்விகள் கேட்டல்
- ✓ முகமன் கூறுவதற்குரிய பொதுவான சொற்றொடர்களைப் பயன்படுத்தியோ எளிய கேள்விகள் கேட்டோ உரையாடலைத் தொடங்க முயலுதல்

**படிநிலைகள்**

1. மாணவர்களிடம் ஐந்து வகையான விளையாட்டுப் பொருள்களை ஒவ்வொன்றாகக் காட்டிக் கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்;

    - இது என்ன விளையாட்டுப் பொருள்?
    - இதை எப்படி விளையாடுவது?
    - இந்தப் பொருள் யார் வீட்டில் இருக்கிறது? (இப்பொருள் இருக்கும் மாணவர்களிடம் 'நீ இந்தப் பொருளை வைத்து யாருடன் விளையாடுவாய்? என்று கேட்டு உரையாடுங்கள்)









**விளையாட்டுப் பொருள்களைப்பற்றி ஆசிரியர் பிள்ளைகளுடன் கலந்து பேசுதல்**

2. பிள்ளைகளை 'ஓடி விளையாடு பாப்பா' என்னும் பாடலை உங்களுடன் இணைந்து உற்சாகமாகவும் அசைவுகளுடனும் பாடச் சொல்லுங்கள்.

**ஓடி விளையாடு பாப்பா**

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா
காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா

**- மகாகவி பாரதியார்**

3. பிள்ளைகள் வைத்திருக்கும் விளையாட்டுப் பொருள்களின் படங்களையொட்டிக் கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்;
    - உனக்குப் பிடித்த விளையாட்டுப் பொருள் எது? ஏன்?
    - நீ இதை யாருடன் சேர்ந்து விளையாடுவாய்?
    - இதை நீ எப்போது விளையாடுவாய்?





**பிள்ளைகள் தங்களுக்குப் பிடித்த விளையாட்டுப் பொருளின் படத்தை வெட்டி ஒட்டுதல்**

4. பிறகு ஒவ்வொரு பிள்ளையையும் தனக்குப் பிடித்த விளையாட்டுப் பொருளைப்பற்றிப் பேசச் சொல்லுங்கள்.

5. “விளையாடி முடித்த பிறகு விளையாட்டுப் பொருள்களை எங்கே வைக்க வேண்டும்?” என்று கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

****************************************